இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 05-02-2025

# ஒன்றியமே பாராட்டும் தமிழ்நாடு

தமிழ்நாட்டுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் ஓரவஞ்சனை காட்டும் ஒன்றிய அரசானது, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான பாராட்டுதல்களை மட்டும் வஞ்சனை இல்லாமல் வாரி வழங்குகிறது. அதை அவர்களால் மறைக்க முடியவில்லை. ஒன்றிய அரசால் வெளியிடப்பட்ட பொருளாதார ஆய்வறிக்கையில் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளுக்கு மாபெரும் பாராட்டுதல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனால் கடந்த 31.1.2025 அன்று 2024 - 25 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த அறிக்கையில் தமிழ்நாடு அரசின் பல்வேறு சாதனைகளுக்கு பாராட்டுதல்கள் சொல்லப்பட்டுள்ளது.

*** இந்தியாவின் தோல்பொருட்கள் மற்றும் காலணிகள் உற்பத்தியில் 38% பங்களிப்பும் இந்தியாவின் மொத்த தோல்பொருள்கள் ஏற்றுமதியில் 47% பங்களிப்பையும் தமிழ்நாடு வழங்கியுள்ளது என்று இந்த அறிக்கையில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.**

*** தோல் பொருட்கள் உற்பத்தித் துறையில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட வேலைவாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாகவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெரிய காலணி உற்பத்தியாளர்களை ஈர்ப்பதற்கும், கிராமப்புறங்களில் தொழிற் பேட்டைகளை உருவாக்கவும் எடுத்துள்ள முயற்சிகளை இந்த ஆய்வு எடுத்துக் காட்டியுள்ளது. பெண்களுக்கான வேலை வாய்ப்பை வளர்த்துள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளது.**

*** தமிழ்நாட்டில் முதலீட்டாளர்களின் தேவைக்கு ஏற்ப வழங்கப்படும் ஊக்கத் தொகை முறை, மூலதன மானியங்கள், ஊதிய மானியங்கள் மற்றும் நில விலை மானியங்கள் போன்றவற்றை தமிழ்நாடு அரசு சிறப்பாக வழங்கி வருகிறது என்றும் தெரிவித்துள்ளது.**

*** தமிழ்நாட்டின் இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தை ஒரு புதுமையான முயற்சியாக ஆய்வறிக்கை விவரித்து உள்ளது. கொரோனா -19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்ட கல்வி இடைவெளியைக் குறைப்பதற்காக இத்திட்டம் தொடங்கப்பட்டது. இதன் விளைவாக, மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வகுப்பறைகளில் பங்கேற்பதாகவும், மாணவர்கள் கணிதம் மற்றும் மொழித் திறன்களில் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றம் கண்டுள்ளனர் என்றும் பொருளாதார ஆய்வு அறிக்கை குறிப்பிட்டுள்ளது.**

தரமான கல்வி வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழகம் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. இதற்குக் காரணம் பள்ளிக் கல்வித் துறையால் கொண்டுவரப்படும் பல்வேறு திட்டங்கள் ஆகும்.

அனைவர்க்கும் கல்வி என்ற அடிப்படை இலக்கை மையமாகக் கொண்டு, கொரோனா காலத்தில் கற்றல் இடைவெளி, குறைபாடு ஏற்பட்டதை மனதில் கொண்டு, உருவாக்கப்பட்டதுதான் 'இல்லம் தேடி கல்வி' என்ற திட்டம் ஆகும். 38 மாவட்டங்களில் 1.8 லட்சம் தன்னார்வலர்களால் 30 லட்சம் மாணவர்கள் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்துக்காக ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 80,138 கல்வி மையங்கள் தொடங்கப்பட்டன. அனைவரையும் பள்ளிகளை நோக்கி வரவைக்கும் கல்வியில் சிறந்த திட்டமாக இது தொடங்கப்பட்டது. அதன் நோக்கத்தை முழுமையாக நிறைவேற்றியும் காட்டியது இத்திட்டம்.

புதிய செயலி மூலமாக பள்ளி செல்லாத 1,88,487 குழந்தைகள் கண்டறியப்பட்டு உரிய வகுப்பில் சேர்த்து பயிற்சிகள் தரப்பட்டது. பள்ளிகளில் பயிலும் 16 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் எண்ணும் எழுத்தும் இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் மாதிரி பள்ளிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற பல்வேறு திட்டங்களின் மூலமாக பள்ளிக் கல்வி செழுமை பெற்று வருகிறது.

தமிழ்நாட்டின் ஆளுநராக உட்கார்ந்து கொண்டிருக்கும் ஆர்.என்.ரவி இங்கு செய்து வரும் பொய்ப் பிரச்சாரங்களுக்குப் பதிலடி தரும் வகையில் இந்த அறிக்கையானது அமைந்துள்ளது.

தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டை விட்டுப் போய்க் கொண்டிருப்பதாகச் சொல்லி வருகிறார் ஆளுநர் ரவி. 'தமிழ்நாட்டுக்குள் வந்து எதற்காகத் தொழில் தொடங்குகிறீர்கள்? வெளி மாநிலத்துக்குப் போங்கள், வேறு மாநிலத்துக்குப் போங்கள்' என்ற கெட்ட எண்ணத்தோடு அவர் சொல்வதாகத்தான் இதனைப் பார்க்க வேண்டும். அவர் சொல்வது போல யாரும் போகவில்லை. பல்வேறு நிறுவனங்கள் வந்து கொண்டிருக்கிறது என்பதை ஆய்வறிக்கை சொல்கிறது. இந்த ஆய்வறிக்கையை முதலில் படிக்க வேண்டியது ஆர்.என்.ரவிதான்.

இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் கவர்னர் சி.ரங்கராஜன், மெட்ராஸ் ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ் தலைவர் மற்றும் இயக்குநர் கே.ஆர்.சண்முகம் ஆகிய இருவரும் கடந்த ஆண்டு மே மாதத்தில் ஒரு அறிக்கையைத் தந்தார்கள்.

**"தமிழ்நாடு அரசின் பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 8.08 சதவிகிதம் முதல் 10.69 சதவிகிதம் வரை உயரும். இந்திய சராசரி பொருளாதார வளர்ச்சியை விட தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமாக நிகழ்ந்து வருகிறது. இரட்டை இலக்கை அடைவதற்கான திறன் தமிழ்நாட்டுக்கு உள்ளது. 2021 முதல் 23 வரை மாநிலத்தின் சராசரி பொருளாதார வளர்ச்சி 8 சதவிகிதமாக இருந்தது. இது அடுத்தடுத்து வரும் காலங்களில் 10 சதவிகிதத்தை அடையும். தமிழ்நாடு அரசின் பல்வேறு செயல்பாடுகள்தான் இதற்குக் காரணம். தமிழ்நாடு அரசு மேற்கொண்ட முயற்சிகள் வளர்ச்சியின் வேகத்தையும் நிலைத்தன்மையையும் உறுதி செய்துள்ளது"** என்று அந்த அறிக்கையில் சொல்லி இருந்தார்கள். அத்தகைய வளர்ச்சியை நோக்கித் தமிழ்நாடு சென்று கொண்டிருப்பதை ஒன்றிய அரசின் பொருளாதார ஆய்வறிக்கை உறுதி செய்துள்ளது.

**ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டுள்ள பொருளாதார ஆய்வறிக்கையை முதலில் படிக்க வேண்டியது ஆர்.என்.ரவிதான்.**



கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (3.2.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளையொட்டி சென்னை, காமராஜர் சாலை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, கழக பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., அமைச்சர் பெருமக்கள் தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.2.2025) பேரறிஞர் அண்ணா அவர்களின் 56 வது நினைவு நாளையொட்டி, சென்னை, வாலாஜா சாலையில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை அருகிலிருந்து காமராஜர் சாலையில் அமைந்துள்ள அண்ணா நினைவிடம் வரை அமைதிப் பேரணி நடைபெற்றது. இப்பேரணியில், கழக பொதுச் செயலாளர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், கழக பொருளாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, கழக இளைஞர் அணி செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் பெருமக்கள், கழக துணை பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டச் செயலாளர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் 'மில்லியன் டாலர்' பரிசு அறிவிப்பால்

# ஆரிய - திராவிட கலாச்சார போர் முடிவுக்கு வரும்!

## 'தி நியூயார்க் டைம்ஸ்' கட்டுரை வெளியீடு!

**சென்னை, பிப். 5 -**

**வெண்கல யுக நாகரிகத்தை பற்றிய ஆய்வுகளை வெளியிட்டு நீண்ட கால பண்பாட்டுப் போர் ஒன்றை முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்திருக்கிறார் என்று 'தி நியூயார்க் டைம்ஸ்' கட்டுரை தீட்டியுள்ளது.**

**மில்லியன் டாலர்கள் வேண்டுமா? இந்த பண்டைய 'எழுத்துருக்களை கண்டறிய முனைக' என்ற தலைப்பில் 'தி நியூயார்க் டைம்ஸ்' ஆங்கில நாளேடு கட்டுரை ஒன்று தீட்டியுள்ளது.**

அதில் கூறியிருப்பதாவது: -

மில்லியன் டாலர்கள் வேண்டுமா? இந்த பண்டைய 'எழுத்துருக்களை கண்டறிய முனைக என்று ஒரு இந்திய மாநிலத் தலைவர் (தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்) பரிசு அறிவித்திருக்கிறார். வெண்கல யுக நாகரிகத்தை பற்றிய ஆய்வுகளை வெளியிட்டு நீண்ட கால பண்பாட்டுப் போர் ஒன்றை அவர் முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்திருக்கிறார். இது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக அறிஞர்களை குழப்பத்தில் ஆழ்த்திய ஒரு புதிர். இப்போது அதற்கு ஒரு அழகான பணப் பரிசு உள்ளது.

புராதன சிந்துவெளி நாகரிகத்தின் எழுத்துக்களை கண்டறியும் எவருக்கும் $1 மில்லியன் பரிசு. இந்த எழுத்துக்களை உருவாக்கியவர்கள் பற்றி ஒப்பீட்டளவில் குறைவாகவே தெரியும். அவர்கள் சுமார் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு இன்றைய இந்தியா, பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் பகுதிகளில் ஒரு பரந்த நகர்ப்புற அமைப்பைக் கட்டினார். 2,000க்கும் மேற்பட்ட தளங்களில் நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் பல கலைப்பொருட்களை வெளிக்கொண்டு வந்துள்ளன.

ஆனால், இந்த நாகரிகத்தின் எழுத்துருக்களை படிக்கும் வரை, அதன் மொழி, பண்பாடு, மதம் மற்றும் அதன் உயர்வு மற்றும் வீழ்ச்சியின் வரலாறு மர்மமாகவே இருக்கும். எழுத்துருக்களை கண்டறியும் முயற்சிகளைப் புதுப்பிப்பதற்காக தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின் இந்தப் பரிசை அறிவித்திருக்கிறார். இந்தியாவில் அதிகரித்து வரும் இந்துத்துவ தேசியவாதிகள், இந்துத்துவத்தின் வேத மதத்தை இந்தியாவுக்குக் கொண்டுவந்த ஆரிய இனமே இந்தியாவின் பூர்வக்குடிகள் என்று வாதிடுகின்றனர். இந்தக் கூற்று, பிரதமர் நரேந்திர மோடியின் கட்சியால் ஊக்குவிக்கப்படும் இந்துத்துவ இன மேலாதிக்கத்தின் மைய கொள்கையாகும்.

முதல்வர் மு.க.ஸ்டாலினின் கட்சி மற்றும் பலர் வேறு ஒரு கருத்தைக் கொண்டுள்ளனர். இந்தியாவின் தெற்கில் உள்ள திராவிடர்களே இந்தியாவின் பூர்வீக மக்கள் என்றும், வட இந்தியாவின் ஆரியர்கள் ஐரோப்பாவிலிருந்து படையெடுத்து வந்தவர்கள் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (உண்மையில், ஆரியர்களுக்கும் திராவி டர்களுக்கும் இடையிலான வேறுபாடு தெளிவாக இல்லை.) இந்த எழுத்துருக்களை கண்டறிதல் இந்த விவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க உதவும் என அவர்கள் நம்புகின்றனர்.

இந்துத்துவ தேசியவாதிகளின் கடந்த காலக் கருத்தில், சிந்துவெளி எழுத்துகள் பெரும்பாலும் சமஸ்கிருதத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்று நம்புகின்றனர். சமஸ்கிருதம் இந்தியாவின் ஒரு பாரம்பரிய மொழியாகும். மேலும் இந்து மத நூல்கள் இந்த மொழியில் எழுதப்பட்டுள்ளன. மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் பலரின் கருத்தில், இந்த ஸ்கிரிப்ட் பெரும்பாலும் தமிழ் மூலத்தைக் கொண்டிருக்கலாம். (தமிழ், ஒரு திராவிட மொழி, இந்தியாவின் மற்றொரு பாரம்பரிய மொழியாகும்) இது, இந்தியாவின் பூர்வகுடிகளான திராவிடர்களின் கூற்றையும் உறுதிப்படுத்தும்.

இந்த எழுத்துருக்கள் இதுவரை கண்டறியாததற்கு காரணம் முயற்சியின்மை அல்ல. தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் மொழியியலாளர்கள் உலகெங்கிலும் பல ஆண்டுகளாக இந்த ஸ்கிரிப்டைத் புரிந்து கொள்ள முயற்சி செய்து வருகின்றனர் என்று மு.க.ஸ்டாலின் $1 மில்லியன் பரிசை அறிவிக்கையில் கூறியுள்ளார். 1964 முதல் சிந்து ஸ்கிரிப்டைப் படித்து வரும் பின்லாந்து இந்திய வியலாளர் அஸ்கோ பர்போலா, இதை கண்டறிவதன் மூலம் சிந்துவெளி நாகரிகத்தை வரலாற்றின் தொடக்கம் என சொல்லாம் என்று கூறினார்.

சிந்துவெளி நாகரிகம், ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது, இது எகிப்து, மெசபடோமியா மற்றும் சீனாவின் நன்கு அறியப்பட்ட நாகரிகங்களுக்கு இணையானதாக நிபுணர்களால் கருதப்படுகிறது. மிகப் பழமையான நாகரிகங்களில் ஒன்றான இது, வெண்கல யுகத்தில் சிந்து மற்றும் சரஸ்வதி நதிகளின் கரைகளில் செழித்திருந்தன. இதில் திட்டமிடப்பட்ட நகரங்கள், நீர் மேலாண்மை மற்றும் வடிகால் அமைப்புகள், பெரிய கோட்டை சுவர்கள் மற்றும் அழகிய மண் பாண்டங்கள் மற்றும் டெராகோட்டா கலைத் திறன்கள் இருந்தன.

1924ல் இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் இந்த நாகரிகத்தின் முதல் கண்டு பிடிப்புகளை அறிவித்ததிலிருந்து, சுமார் 5,000 கல்வெட்டுகள் அகழ்வாராய்ச்சி செய்யப்பட்டுள்ளன. அவை கல்லில் அல்லது உலோகத்தில் செதுக்கப்பட்டவை அல்லது சுடுமண்ணில் முத்திரையிடப்பட்டவை. கல்வெட்டுகளின் சுருக்கம் மற்றும் மொழிபெயர்ப்புக்கு உதவக்கூடிய குறியீடுகளை கொண்ட ரொசெட்டா கல் ஆகியவை இல்லாததும் இந்த எழுத்துருக்களை கண்டறியாததற்கான காரணங்களில் ஒன்றாக அறிஞர்கள் கூறுகின்றனர்.

பார்போலா, களிமண் பலகைகளில் காணப்படும் அறிகுறிகள் முழு சொற்களாகப் படிக்கப்பட வேண்டிய படங்கள் என்று கருதுகிறார். அவை ஒலிப்பியல் ரீதியிலும் படிக்கப்படலாம் என்று அவர் வாதிடுகிறார். அவரது ஆராய்ச்சி ஸ்கிரிப்டின் திராவிட மூலத்திற்கான ஆதாரத்தை வழங்குகிறது என்று அவர் நம்புகிறார். பல கல்வெட்டுகளில் காணப்படும் மீன் அறிகுறிகள், "நட்சத்திரம்" என்றும் பொருள்படும் படவுருக்களாக இருக்கலாம் என்று அவர் கோட்பாட்டை முன் வைக்கிறார். திராவிட மொழியில் மீன் என்று பொருள்படும் "மீன்" என்பது நட்சத்திரத்திற்கான ஒலிப்பொருளாகும்.

10 ஆண்டுகளாக எழுத்துகளை கண்டறிய முயன்ற ஆராய்ச்சியாளர் பஹதா அன்சுமாலி முகோபாத்யாய், மீன் கருதுகோளில் பார்போலாவுடன் வேறுபடுகிறார். சிந்து எழுத்துகளை ஒரு "வணிக எழுத்து" என்று அழைத்த அவர், தொடர்ச்சியாக மீன் அறிகுறிகள் பயன்படுத்தப்பட்ட உதாரணங்கள் தொடர்புடைய பொருட்களின் பெயர்களைக் குறிக்கின்றன என்றும், அகழ்வாராய்ச்சி செய்யப்பட்ட களிமண் பலகைகள் வரி முத்திரைகள் என்றும் கூறினார். இந்த ஸ்கிரிப்ட் ஒலிப்பியல் ரீதியில் அல்ல, சின்னங்களாகப் படிக்கப்பட வேண்டும் என்று முகோபாத்யாய் கூறினார்.

"கார்பஸ் ஆப் இண்டஸ் சீல்ஸ் அண்ட் இன்ஸ்கிரிப்ஷன்ஸ்" என்ற ஆறாவது தொகுதியில் பணியாற்றி வரும் பார்போலா, ஆர்வலர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களிடமிருந்து பல ஆண்டுகளாக நிறைய மின்னஞ்சல்களைப் பெற்றுள்ளார் என்று கூறினார். அவர்கள் ஸ்கிரிப்டை டிகோட் செய்துவிட்டதாக அல்லது புதிய கல்வெட்டுகளைக் கண்டுபிடித்ததாகக் கூறினர். பாகிஸ்தானின் அகாடெமிக் அஸிஸ் கிங்ரானி, சமூக ஊடகங்களில் அத்தகைய கடிதப் பரிமாற்றத்தைப் பகிர்ந்தார். பார்போலா, கிங்ரானியை அவர் எழுதிய புத்தகத்திற்காக பாராட்டினார், ஆனால் அவரது கண்டுபிடிப்புகள் ஸ்கிரிப்டை டிகோட் செய்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தவில்லை என்று வருத்தம் தெரிவித்தார்.

* 'தமிழ்நாடு காத்திருக்கிறது'

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "சிந்துவெளி நாகரிக எழுத்துமுறையைப் புரிந்துகொள்ள வழிவகை செய்யும் திறமையாளர்க்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலரைப் பரிசாக வழங்கிடத் தமிழ்நாடு காத்திருக்கிறது" என கூறியுள்ளார்.

* 'தமிழினப் பெருமை உலகெங்கும் கொடி கட்டி பறக்கட்டும்'

அமைச்சர் தங்கம் தென்னரசு தனது எக்ஸ் தள பக்கத்தில் கூறியிருப்பதாவது: ஓர் இனத்தின் வரலாற்றைத் துடைத்தெறிய வேண்டுமெனில் அதன் கலாச்சாரத்தை அழித்து விட்டால் போதும். அத்தகைய முயற்சிகளை அறிவியலின் துணைக் கொண்டு முறியடித்து வெற்றிநடைப் போட்டுக் கொண்டிருக்கிறார் நமது முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். அதனை அங்கீகரிக்கும் வகையில் புகழ்பெற்ற 'தி நியூயார்க் டைம்ஸ்' இதழ் கட்டுரை ஒன்றினை வெளியிட்டிருப்பதில் பெருமகிழ்வு. தமிழ் இனத்தின் பெருமையும், வரலாறும் உலகெங்கும் கொடி கட்டி பறக்கட்டும் என கூறியுள்ளார்.

### தமிழ்நாடு காத்திருக்கிறது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "சிந்துவெளி நாகரிக எழுத்துமுறையைப் புரிந்துகொள்ள வழிவகை செய்யும் திறமையாளர்க்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலரைப் பரிசாக வழங்கிடத் தமிழ்நாடு காத்திருக்கிறது" என கூறியுள்ளார்.

## பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வெள்ளி யானை சிலை விருது!

## குடியரசுத் தலைவர் வழங்குகிறார்!



சென்னை, பிப். 5 -

பாரத சாரண - சாரணியர் இயக்கத்தில் சிறப்பாக பணியாற்றியவர்களுக்கு வழங்கப்படும் வெள்ளி யானை சிலை மிக உயர்ந்த விருதாகும். அந்த வகையில், பாரத சாரண - சாரணியர் இயக்கத்தின் தமிழ்நாட்டின் தலைவரும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கு, இந்த விருதினை குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு அவர்கள் வழங்கவுள்ளார்.

இந்த தகவலை பாரத சாரண - சாரணியர் இயக்க தேசிய தலைமை ஆணையர் கே.கே.கண்டேல்வால் அறிவித்தார்.

பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழா திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெற்றது. இதனை சிறப்பாக நடத்தியதற்காக, பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழியை, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவு விழாவின்போது வெகுவாக பாராட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.